www.padippakam.com

மனித உரிமைகளுக்கான

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள்

# அறிமுகவுரை

## கலாநிதி ராஜனி திராணகமவின்

60வது நினைவு தின வெளியீடு

நவம்பர் 21, 1989

யு ரி எச் ஆர் (யாழ்.)
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) குழுவின் இன்றைய பங்கு பற்றி...

# 1

எமது அநுபவத்தினூடாக எம்மீதான ஒடுக்குமுறை மிகவும் சிக்கல் வாய்ந்ததானதாக உள்ளதை உணர்கிறோம். ஓர் வித இறுக்கமான சர்வதிகார ஆட்சியின் கீழ், எல்லாவிதமான மாற்றுக் கருத்துகளுக்கும் தடைவிதிக்கப்பட்ட நிலையில் மக்களின் மத்தியில் ஓரளவுக்கு ஒடுக்கப்படுவோர், ஒடுக்குவோர் என இரு பிரிவுகளை இனங்காண முடியும். இந்நிலை எமது சூழலில் இல்லை. இன்றைய எமது சூழலில் சமூகத்திற்கு அப்பாற்பட்ட சக்திகள் மாத்திரம் எமது நிகழ்வுகளின் தன்மையை தீர்மானிப்பதில் பிரதான பங்கு வகிப்பவர்களாகக் கொள்ள முடியாது. இவ்வாறான சிக்கலான நிலைமையில் மனித உரிமைகளுக்கான ஸ்தாபனங்கள், நாம் வேறு இடங்களில் சுட்டிக்காட்டியது போன்று அவை நெகிழ்வுத் தன்மையை கொண்டதாக இருப்பது மட்டுமன்றி புதிய அணுகு முறைகளையும் கொள்கை வடிவங்களையும் உருவாக்குவது அத்தியாவசியமாகின்றது. எமது செயற்பாடானது இரண்டு முக்கிய அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டது என கலாநிதி ராஜனி திரணகம விபரிப்பது உண்டு.

(1) மனித வாழ்க்கையின் விழுமியங்களை முதன்மையாகப் பேணுவதற்குரிய ஒரு சூழ்நிலையை உருவாக்க கடினமாக உழைக்க வேண்டும். மனித வாழ்க்கையின் மேல் ஓர் உயர்ந்த பெறுமதியை வைத்து. இதனையடைவதற்குரிய வழிகளையேற்றுக் கொள்ளாத மார்க்கங்களின் மூலம் இச்சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியாது.

(2) பொதுப்படையாக இன்று எமது சமூகத்தில் வாழ்க்கை என்பது பாதுகாப்பற்றதாக உள்ளதாயினும், நமது பல்கலைக்கழக ஆசிரிய சமூகம் இவ்விடயத்தில் சற்று சலுகை வாய்ந்த நிலையிலுள்ளது. இச் சலுகையை தமது பாதுகாப்பை மேலும் நிச்சயப்படுத்த சுயநலமாக மற்றையோரின் பாதிப்பில் பாவிக்கலாம். ஆனால் இச்சந்தர்ப்பத்

www.padippakam.com



தில் இவ்வுயர் ஸ்தாபனத்தை பயன்படுத்தி சாதாரண மக்களைப் பாது காப்பகற்கும் அவர்கள் தங்களுடைய உணர்ச்சிகளையும் நலன்களையும் வெளிக்கொண்டு வருவதற்குரிய ஒரு இடைவெளியை உருவாக்குவதே இக் கல்விமான்களின் சமூகக் கடமையாகும். இந்தப் பணி நிச்சயமாக பல ஆபத்துக்களை எதிர் கொள்ள வைக்கும் என்பது உண்மையே.

எமது அறிக்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தபோது அவற்றை சமூக, தனிமனித பிணைப்பின் பின்னணியில் வெளிக்கொணர்ந்தோம். அதனூடாக அந்த அவலமான சம்பவங்களை எந்த சக்திகள் செய்தது என்பதை பொருட்படுத்தாது அவற்றை செய்தோம். இவ்வறிக்கைகள் குறிப்பாகப் பொறுப்புபற்றிய (Responsibility) பற்றிய உணர்வை முதன்மைப்படுத்தி சில சிந்தனைகளைத் தூண்டும் கட்டுரைகளையும் கொண்டிருந்தன. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட அறிக்கை 1 இன் அறிமுகம் எமது குறிக்கோள்களைப் பற்றியும், உருவாக்கம் பற்றியும் மேலும் தகவல்களை அளிக்கின்றது. இந்தப் பணியை நாம் இச்சமூகத்திற்கு கொண்டுள்ள கல்விப்பணியின் ஓர் அம்சமாகவே கருதுகின்றோம். இது முற்றிலும் நாம் மனமுவந்து எடுத்த முடிவே யாகும்.

நிகழ்காலத்தில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) அதன் பணிமூலம் பல நிலையற்ற சூழ்நிலைகளுக்கூடாக புதிய பிரதேசத்துக்குள் காலடியெடுத்து வைத்துள்ளது. இப்பணியைப் புரிந்து கொண்டிருக்கும் இச் சிறியகுழு உண்மை மீது கொண்ட வேட்கையாலும், நேர்மையில் உண்டாகும் பலத்தையும் நம்பியே இவ்வேலையில் ஈடுபட்டுள்ளது. இவ்வகையான செயற்பாடுகள் இத்தருணத்தில் மக்களின் நலன்களுக்கு இன்றியமையாதனவாக உள்ளன.

ஒரு பரந்த மக்கள் தளம் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு (UTHR - JAFFNA) இல்லை. கலாநிதி ராஜனி திராணகமவின் கொலையானது, இவ்வேலை முறைகளைப்பற்றிய கணிப்பைக் கேள்விக்குறிகளாக்கியதுடன், எம்மத்தியில் செயற்படும் கபடமான தீயசக்திகளின் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. ஒக்டோபர் 87 போர் அவலங்களுக்குப் பின்னர் பல்கலைக் கழகத்தை மீண்டும் திறப்பதில் முன்னணி பாத்திரம் வகித்த ராஜனி திராணகம, அக்காலந்தொட்டு சாதாரண மக்களுக்கு உருவாக்கிய ஓர் சிறிய இடைவெளியை அழிப்பதே இக்கொடிய செயலின் நோக்கம்.

தற்போது எங்கு பயமில்லையோ, அங்கு நம்பிக்கையின்மை நிலவுகிறது. கடந்த காலங்களில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக

www.padippakam.com



முயற்சித்தவர்கள் கூட தற்போதைய நிலையில் ஒன்றும் பயனளிக்காது என்ற நிலைக்கு வந்துள்ளனர். அவர்கள் இத்தகைய கொலைகளுக்கும் துன்பத்திற்கும் பிறகும் கூட மக்கள் தங்களுடைய மனநோக்குகளை மாற்றிக் கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். சிலர் இத்தகைய கொலைகளைக்கூட உன்னதமாகப் பார்க்கிறார்கள். வேறுபலருக்கு இவைவெறும் அரட்டையின் சாரம்சமாகின்றது. மேலும் சில நல்லெண்ணம் கொண்டோர், இத்தகைய அவலநிலையானது தவிர்க்க முடியாதது எனவும், இயற்கையாகவே அதன் தர்க்கீக வளர்ச்சியில் ஒரு முழுமையான அழிவுக்கு இட்டுச் சென்றே முடிவுக்கு வரும் என்கின்றனர். தனிப்பட்ட மனிதர் செய்யக்கூடியதும், ஆகக்கூடியதுமான செயல் தமது அன்றாட கடமைகளைப் புரிந்து அதன்மூலம் தம்மைச் சார்ந்தவர்களுக்கு உதவுவதே என்று அவர்கள் வாதாடுகின்றார்கள். வெளிப்படையாக, மனச்சாட்சியின் உந்துதலின் பேரில் உண்மைகளையெடுத்துக் கூறல் பிரயோசனமற்றது என கருதுகின்றனர். அத்துடன் இச்செயல் அர்த்தமற்ற வீரத்தற்கொலைக்கு ஒப்பாகும் எனக் கொள்கின்றனர். இந்நிலைப்பாட்டை நாம் ஒரு தனிப்பட்டவரின் அபிப்பிராயம் என்ற ரீதியில் மதிக்கத்தான் வேண்டும். ஆனல் இதற்கு ஸ்தாபனரீதியான ஆதரவு அளிக்கமுடியாது.

பேச்சு வார்த்தை ஓர் தீர்வின் முக்கிய அம்சமாகும். ஆனல் ஓர் நிலைத்து நிற்கும் தீர்வு பங்கு கொள்பவர்களின் அக்கறையிலும், நெகிழ்வு தன்மையிலும், அத்துடன் பொது மக்கள் எவ்வாறு தமது விழுமியங்களை முன்வைக்கிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது. இதில் முதலாவது எல்லோராலும் ஏற்று கொள்ளப்படுகின்றது. இரண்டாவது, அதாவது பொது மக்களின் பங்கு பெரும்பாலாக முற்றாக புறக்கணிக்கப்படுகின்றது. இதுவே பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுபவர்களின் தீவிரவாதத்திற்கு ஒரு தடையை கட்டி அவர்களின் சகிக்கும் தன்மையற்ற போக்கை வரையறுக்கும். ஆனல் இவ்வம்சம் புறக்கணிக்கப்பட்டது. எம்மக்களின் பெறுமானங்களின் பொதுவான சீரழிவே இதற்கு காரணமாகும். இவ்வழியே, நெருக்கடியை மேலும் ஆழமாக்கி இப்பிரச்சினையிலிருந்து விடுபடமுடியாது என்ற நம்பிக்கையின்மையை உண்டாக்கியுள்ளது. இச்சீரழிவு மக்கள் புறக்கணித்த விழுமியங்களுடனும், இனப்பிரச்சினைகளை கையாளும் போது அவர்கள் ஏற்றுக் கொண்ட புதிய விழுமியங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட புதிய விழுமியங்கள் ஒரு குறிப்பிட்ட குழுவை மையப் பொருளாக வைத்து, ஏனையவற்றை புறக்கணிக்கும் தன்மையுடையனவாக உள்ளன. இவை இனம், சமயம் அல்லது வேறு எந்தவொரு குழுவினதும் தனித்துவத்தை சார்ந்ததாக இருக்கும் குழு தவிர, அதற்கு அப்பாற்பட்ட மக்களும் அவர்களது

www.padippakam.com



நலன்களும் அலட்சியப்படுத்தப்பட்டன. இந்த எண்ணம் மக்கள் மத்தியில் சூழ் கொள்ள ஆரம்பித்ததிலிருந்து, ஒரு மனிதனின் உயிர் என்பதின் பெறுமானத்தை தரங்குறைக்க இலகுவாயிருந்தது. தனிப்பட்ட விருப்புகளை அடைவதற்கு எந்தவித உத்தியும் ஏற்று கொள்ளத்தக்கதாய் இருந்தது.

அரசியல் ரீதியில் மொழி, இனம், மதம் போன்றவையால் எழுந்த பிரச்சினைகளும் இன்று மிகவும் குழப்பமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. தமிழ் தேசியவாத அபாயத்தை எதிர் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட சிங்கள அரசியல் இராணுவம் தற்போது சிங்கள மக்களின் மீதே ஏவி விடப்பட்டுள்ளது, ஒரு தேசிய பிரதேசத்தை பெறுவதற்கு என ஆரம்பிக்கப்பட்ட தமிழரின் தேசிய போராட்டம் எதனை பாதுகாத்து பெற்றுக் கொள்ள முயன்றதோ அதனையே கொச்சைப் படுத்தி கொண்டுள்ளது. நாடு முழுவதும் வியப்பிற்குரிய நம்பமுடியாத அணிசேரல்களால் குழப்பட்டுள்ளது. இவ் அணிகள் எந்தவிதமான குறிக்கோள்களையுமோ அல்லது நீடித்து நிற்கும் விழுமியங்களையோ தழுவி அமையவில்லை. வெறும் சந்தர்ப்பவாத வசதி கருதி எழுந்த இராஜ தந்திர அணிசேரல்களே இவை.

20 வருடகாலத்திற்குப் பின்னர் யாழ்ப்பாண தமிழ் மக்கள் எந்தக் கட்டத்தில் நிற்கிறார்கள். அவர்கள் அக்கறை காட்டி பெருமை கொண்ட உயர்ந்த கல்வித் தராதரங்கள் இப்போ எங்கே? கஷ்டப்பட்டு உழைத்து எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த விவசாயிகள் நிர்க்கதியில் கைவிடப்பட்டனர். சேவை என்ற கொள்கை எங்குமே கேலிக்கிடமாகின்றது.

புத்தி ஜீவிகள் மத்தியில் நிலவும் பொதுவான தன்மையும், பெறுமானங்கள் பற்றிய நிலைமையும், மக்கள் மத்தியில் பரவலாக ஏற்று கொள்ளப்பட்ட சில நோக்குகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். இது எம் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியில் உள்ளது. புத்தி ஜீவி வாழ்க்கையின் மீதும் அவர்களது பார்வையின் மீதும் இது பெரும் நெருக்குதலை ஏற்படுத்தி மூச்சுத் திணற வைக்கிறது. தற்போதைய நிலையில், எந்தவொரு கொலையும் மக்களின் ஆக்ரோஷ கண்டனத்தைப் பெற்று கொள்வதில்லை. பலர் மௌனமாக இவற்றை கண்டிப்பார்கள். ஆனால் இன்னும் பலர் இவற்றைப் பற்றி பெருமையாக பேசி கொள்வார்கள். ஓர் கதியற்ற மனிதனின் திட்டமிட்ட கொலையைக் கோழைத்தனமானது என்றும் பிழையானது என்றும் கூறுவதைவிட்டு அதற்கு காரணங்கள் காட்டுவார்கள் பலர்.

## எதிர்காலம்

இவ் விழுமியங்களின் பாங்கிலேயே தற்போதைய அரசியல் பாங்கு கிளைவிட்டு வளர்ந்துள்ளது. இப்பெறுமானங்கள் நிலைத்து நிற்குமாயின்

www.padippakam.com



கல்வியும் அறிவியல் சார்ந்த வாழ்வும் மேலும் தரம் குறைக்கப்படும். இவ்வாறான அவல நிலையின் பாதிப்பிற்குள்ளானவர்களின் ஒரு பகுதி இளைஞர்கள் ஆகும். எமது சமூகமானது ஓர்விதத்தில் அவர்களுக்கு வழிகாட்டவோ தலைமை கொடுக்கவோ தயாரற்ற நிலையிலேயே இருக்கின்றது. பெரும்பாலானவர்கள் ஆயுதம் தாங்கும் நிலைக்கு எதிர் குழுக்களின் பின்னால் தள்ளப்பட்டு தமது உயிரை தமக்கே புரியாத காரணங்களுக்காக கொடுக்கின்றனர். இன்று அவர்களை "பாவிப்பது" என்ற சொற்பிரயோகம் பல சக்திகளின் மத்தியிலும் சர்வசாதாரணமாகி விட்டது.

எந்த பொறுப்பு வாய்ந்த நபரும் இன்றைய நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது. எமக்கு அமைதியும் சமூக வாழ்க்கையும் தேவையெனில் எமது அழிவிற்கு பாத்திரமான பெறுமானங்களை நாம் கேள்வி கேட்க வேண்டும் என்பது இன்று மிகவும் வெளிப்படையானது. பேச்சுவார்த்தைகள் பற்றிய எமது அனுபவங்கள் எல்லாம் சீரழிந்து கொண்டிருக்கும் பெறுமானங்களுக்கு எதிரான மாற்றுப் போக்கின் வளர்ச்சியின்றி சமாதானத்தை பெற்றுத்தரா என்பது தெட்டத் தெளிவாகின்றது. இவ்வாறான போக்கை மாற்றியமைப்பது என்பது சமுதாயத்தினுள் இருந்தே எழ முடியும்.

எதிர் முகாம்களுக்கிடையில் ஏதோ ஓர் ஒப்பந்தத்தை ஓர் சக்தி, பேச்சுவார்த்தை மூலமோ அல்லது வேறு வகையில் திணிப்பதின் மூலமோ தான் சமாதானம் வரலாமேயொழிய வேறு எல்லா மாற்று வழிகளும் வீணானவை என கருதுவது மிகவும் அபத்தமானதும் தப்பித்து கொள்வதற்கு சமமான ஓர் வாதமேயாகும் என்பது எமது அனுபவத்தில் இருந்து பெறப்பட்ட ஒன்றாகும்.

சிறுகுழுக்களினதும் தனிப்பட்ட நபரினதும் முயற்சிகளைப் புறக்கணித்து பெரிய பாத்திரங்களின் நடவடிக்கைகளை மட்டும் நோக்கும்போது இவ்வெடுகோள் உண்மைபோல் புலப்படும். ஆனால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் தமது சுயமரியாதையைப் பேணி, இழிவுக்கு எதிராக நிற்கும் செய்கைகளில் சிறிய வெற்றிகளைக் காட்டியுள்ளனர். இவற்றைப் புறக்கணிப்பது இலகுவானது. ஏனெனில் இவற்றைப் பற்றி எவருமே எழுதவில்லை. ஆனால் இவைதரும் படிப்பினைகளைப் புறக்கணித்து எல்லாமே இருண்ட ஓர் படத்தை வரைதல் அறிவியல் ரீதியான கபடமாகும். அறிவியல் ரீதியில் நேர்மையற்ற தன்மையையும், விடயங்களை மிக எளிதுபடுத்திப் பார்ப்பதும், பொதுவாக முதுகெலும்பில்லாத தன்மையும், தப்பிப்பிழைக்கும் மனப்பாங்குடனும் என்றும் இணைந்தே காணப்படும். ஓரளவிற்கு ஸ்தாபன ரீதியாக அதிகாரமுடைய பல்கலைக்கழகங்களும், மற்றும் தாபனங்களும் சமுதாயத்தின் நலனை நிலைநிறுத்த முனையாதிருப்பது ஒருபோதும் மன்னிக்கக் கூடிய தொன்றல்ல.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறான சிறிய வெற்றிகளுக்கு உதாரணமாக கீழ் குறிப்பிடப்பட்டவற்றைக் கூறலாம்.

* திருநெல்வேலி தொழிற்சாலை பெண்கள் கடந்த ஜனவரி மாதத்தில் தமது சக ஆண் தொழிலாளர்கள் இந்திய இராணுவத்தால் தடைக்காவலில் வைத்திருக்கப்பட்டபோது அவர்களுடைய விடுதலையைப் பெற்றுக் கொண்டமை.

* கடந்த ஜுலை மாதம் குருநகர்ப் பகுதியில் மக்கள், கட்டாய இராணுவச் சேவைக்காக இளைஞர்கள் திரட்டப்பட்டபோது அதனையவர்கள் கையாண்டமுறை.

* மே 1986 இல் நடைபெற்ற இயக்க அழிப்பில் கீழ்மாகாணப் பெண்கள் அவ்வியக்க அங்கத்தவர்களைப் பாதுகாத்தவிதம்.

* இன்னொரு பெரிய வெற்றியானது ஒக்டோபர் 87 இற்குப் பின்னர் நிலவிய நிச்சயமற்ற சூல்நிலையில் பல்கலைக்கழகத்தை விரைவாகத் திறப்பதில் அயராது உழைத்த ஆசிரியர்களதும், ஊழியர்களதும் முயற்சி மற்ற ஸ்தாபனங்கள் வேலைக்குக் கட்டாயம் செல்லவேண்டும் என்ற கட்டளையாலும் ஒர் ஒழுக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தபோது பல்கலைக்கழகம் ஒரு சிறிதளவு சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் பெற்றுக்கொள்ளமுடிந்தது. இச் சுதந்திரத்தை முழு சமுதாயத்தின் பாதுகாப்புக்காகவும் உபயோகிக்க ஏதுவாக இருந்தது. கலாநிதி ராஜனி திரணகம இம்முயற்சிகளில் முன்னணியில் நின்றார். யாழ். பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்ட மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்ற ஸ்தாபனம் ராஜனி கேட்க விரும்பிய மேற்கூறிய வகையிலான சிறிய வெற்றிகளையும் அவ்வப்போது வெளாக்கொணர்ந்தது.

கலாநிதி ராஜனி திராணகமவின் அறிவியல் ரீதியான நேர்மையும் (intelectual honesty) மக்கள்மீது வைத்த அன்புமே, அடிமட்டத்தில் மக்கள் வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்கிறார்கள் என்று அவர் கூர்ந்து அவதானிப்பதற்குக் காரணமாக இருந்தது.

அவரின் கொலை சமுதாயத்தில் பல்கலைக்கழகம் வகிக்கும் இடத்திற்கு விட்ட சவால் மட்டுமன்று. இது தங்களது மனச்சாட்சிக்குத் தக்கதாகக் கடமையைச் செய்து உண்மையான தீர்வுகளைத் தேடும் எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கும், குழுவிற்கும் விடுக்கப்பட்ட சவாலாகும். சிறிய வெற்றிகளிலிருந்து கற்கவேண்டியவை நிறையவுள்ளன. பெரிய வெற்றிகள் இல்லையெனில் அதற்கு காரணம் பெரும்பான்மையான மக்கள் அதற்கு வேண்டிய மனோதிடத்தைப் பெறவில்லையென்பதாகும். எதிர்காலத்தில் நாம் எதிர்நோக்கும் சவால் இதுதான்.

படிப்பகம்

www.padippakam.com

# கலாநிதி ராஜனி திராணகமவின் கொலை: மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) (UTHR) முகம் கொடுக்கும் சவாலும் மறு பதிப்பீடும்

செப். 21ம் திகதி டாக்டர் ராஜனி திராணகம கொலை செய்யப்பட்டார். இவர் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் முன்னணி உறுப்பினரும், அதன் உயிர்நாடியாகவும் விளங்கியவர். அவர் பணிபுரியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது அங்கிருந்து சில யார் தூரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். நூற்றுக்கணக்கான அர்த்தமற்ற கொலைகளாலும் தற்பாதுகாப்பு எனும் அலட்சிய மனோபாவத்தாலும் மௌனமாகிப் போன ஒரு சமுதாயத்தில் இந்தக் கொலையின் முக்கியபத்துவம் என்ன என ஒருவர் கேட்கக் கூடும். நினைவுக் கூட்டங்களில் பேசிய பல பேச்சாளர்கள் கூறியது போல் இக் கொலை மிகவும் கோழைத்தனமான ஒரு செயலாகும். நிராயுதபாணியாக தனிமையில் சென்று கொண்டிருந்த இரு பெண் குழந்தைகளின் தாய் கொலை செய்யப்பட்டுள்ளார். இக் கொலையின் மூலம் கொலையாளிகள் எதனை அழிக்க முயன்றார்கள் என்று நோக்கும்போது, இக்கொலையின் பாரிய முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. ராஜனி தன் செயல்களிலும் கொள்கைகளிலும் மதித்து வந்ததும்; அவரும், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் மற்றைய அங்கத்தவர்களும் நம் வாழ்விற்கும், சமூகத்திற்கும் தேவை என்று கொண்ட பெறுமானங்களையும் அழிக்க முயன்றதையே இது பிரதிபலிக்கின்றது. அழிவுப்பாதையில் தன்னைத்தானே இழுத்துச் செல்லும் சமுதாயத்திற்கு சில கசப்பான உண்மைகளை எடுத்துச் சொல்வதிலும், கல்விச் சுதந்திரத்தை செயல்படுத்துவதிலும், மாணவர்களுக்கு அவர்களிடையே இருந்த குறுகியதும், இலகுபடுத்தப்பட்டதுமான பார்வைகளைச் சுட்டிக் காட்டுவதிலும், பல்வேறுபட்ட வழிகளில் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன் சம்பந்தமான நடைமுறை வேலைகளிலும் ராஜனி ஈடுபட்டு வந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கொலை எவ்வித ஒரு கட்டுப்பாடும் அற்ற இராணுவ கோபாவேசத்தில் எடுக்கும் நடவடிக்கைகளில் இருந்து வேறுபடுகின்றது. இது முன் கூட்டியே மிகவும் நுட்பமாக திட்டமிட்டு செய்யப்பட்டதொன்று ராஜனியின் மரணத்தால் எவ்வித குழப்பமும் ஏற்படாத வகையில், உடற் கூற்றியல் வாய் மொழிப்பரீட்சை முடிவடைந்த ஒரு சில நிமிடங்களிலேயே இக் கொலை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும் இக் கொலை நடந்தது யுத்த நிறுத்தத்தின் இரண்டாம் நாள். கொலையாளி ஓரளவு தனிமையான ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து காத்திருந்திருக்கிறான். ராஜனி சுடப்பட்டு வீழ்ந்த பிற்பாடு தனது சைக்கிளை நிறுத்தி விட்டு மேலும் பல தடவை அவரின் தலையில் சுட்டு விட்டு தப்பிச் செல்வதற்கும் போதியளவு அவகாசம் இருந்திருக்கின்றது.

ராஜனியின் மரணமானது கூட, இன்று விடுதலைப் போராட்டத்திற்கு எதிர்மறுப்பான சமூகத்தின் மீதான வளர்ந்து வரும் பாசிச பிடிப்பின் பல்வேறு அம்சங்களை வெளிக்கொணர்ந்துள்ளது. ராஜனி அவர்கள் இவ்வாறான போக்கின் வளர்ச்சியை கடுமையாக எதிர்த்து வந்தவர். கொலையாளியின் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தை கேட்டதும் ஒரு சில மருத்துவ பீடமாணவர்களையும் பொது மக்களில் சிலரையும் தவிர ஏனைய சகலரும் ஓடிச் சென்று தங்கள் வீடுகளைப் பூட்டி விட்டு உள்ளே இருந்தனர். ராஜனியை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்ல ஒரு வாகனத்தை தேடுவதே பெரும் சிரமமாக இருந்தது. அயலவர்களோ அவருடன் தொழில் புரிபவர்களோ கொலை நடந்த தினம் அவர் வீட்டிற்குச் சென்று குழந்தைகளுடன் தங்க முன்வரவில்லை. இந்நிகழ்வுகளுடன் தம்மை தொடர்புபடுத்திக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அவர் குடும்பத்துடன் நெருக்கமான பலர் அவரது மரணச் சடங்கிலும் அதனைத் தொடர்ந்து நடந்த நினைவுக் கூட்டங்களிலும் பயம் காரணமாக பங்கு பெறவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். உள்ளூர் வைத்தியர்களும், மருத்துவ பீடத்தை சார்ந்தவர்களும் எவ்வாறு இக்கொலைக்கு முகம் கொடுப்பது என்பதில் மிகவும் கிலேசத்துடனும், குழப்பத்துடனும் காணப்பட்டனர். ஆனால் இக் கொலை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத மிகவும் தவறான ஒரு செயல் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லை. இது கொலையாளிகளுக்கு நன்கு தெரிந்து இருக்கின்றது. அதனால் தான் அவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ளாமலும் தமது செயலுக்கு உரிமை கோராமலும் இருந்து விட்டார்கள். ராஜனிக்கு பல நண்பர்களும் அவரை மதிப்பவர்கள் பலரும் இருந்தனர். அவர்கள் ராஜனியின் பாசத்திற்கு உட்பட்டவர்கள். அவர்களுக்காக ராஜனி பல ஆபத்துக்களையும் எதிர் நோக்கத்தயாராக இருந்தார். ராஜனியின் எதிரிகள் அவரின் நிலைப்பாடுகளுக்கு எதிரானவர்கள். ஆனால் அவர்களுக்கு இதனை

www.padippakam.com



வெளிப்படையாக சொல்வதற்கு துணிவில்லை. ஏனெனில் வெளிப்படையாக இதனை கூறுவதனால் அவர்கள் தமது வெறுமையையும், தமது செயல்களின் உண்மையான உள்நோக்கங்களையும், குறிக்கோள்களையும் மக்கள் தெரிந்து விடுவார்கள் எனப் பயந்தார்கள். எனினும் ராஜனியின் கொலை சம்பந்தமாக ஆரம்பத்தில் இருந்தே மற்றய கொலைகளைப் பற்றியது போல் கோபம் வெளிப்படவில்லை. மாறாக கவலையும் அச்சமும் கலந்த அபிப்பிராயமே இருந்தது. இப்படியான உணர்ச்சியற்ற, எதற்கும் இணங்கிப் போகும் ஒரு சமுதாயத்தையே ராஜனியின் கொலையாளிகள் கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்கள்; இந்நிகழ்வின் முக்கியத்துவம் இங்குதான் இருக்கிறது.

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பும் எதிர்கால கல்வியும்

கடந்த ஒரு வருடகாலமாக UTHR தனது அறிக்கைகளில் எல்லா ஆயுதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த மனித விதி முறைகளுக்கு எதிரான செயல்களை எடுத்துக் கூறியது. இவ்வறிக்கைகள் உண்மையின் பலத்தையே அடிப்படையாக கொண்டிருந்தன. அத்துடன் பாசிச முறைக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் சமூகத்திற்கு ஒரு சமூகப் பெறுமானத்தைக் கொடுப்பதற்காக எடுத்த ஒரு முயற்சியாகும். மேலும் அது சமூகம் பாசிச முறைக்குள் எவ்வளவு தூரம் போய்க் கொண்டிருக்கிறது என்ற விடயத்தை சமூகத்திற்குள்ளிருந்தே விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்கும் முயற்சியாகும். இது தம்மையே தூய்மைப்படுத்த அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட ஒரு செய்முறையாகக் கொள்ளப்பட்டது. சமூகத்திற்கு வெளியே நின்று அந்நியராக சமூகத்தை கண்டனம் செய்யாது, பிரச்சனைகளில் நாமும் தொடர்பு உடையவர்கள் என்றும், எமது செயல்களும் மனப்போக்குகளும், தீமைகளின் வளர்ச்சிக்கும் பங்களிப்பவை எனும் உண்மையை உணர்ந்தவர்களுள் ராஜனியும் ஒருவர். அவ்வகையில இன்று ஆயுதம் தாங்கும் இளைஞர்களைக் கூட இச்சமுதாயத்தின் அவலமான நிலையின் கைதிகளாகவே கருதவேண்டியுள்ளது. ராஜனி அவர்களின், சமுதாயத்தின் நிலைபற்றிய ஆத்திரமானது எப்போதும் ஓர் இரக்க உணர்வுடன் கலந்தே இருந்தது. இந்த உண்மையை உணர்ந்ததினால் தான் ராஜனியும் மற்றும் பலரும் ஆசிரிய சங்க உறுப்பினர் ளாக, மாணவர் ஆலோசகர்களாக, மூதவை அங்கத்தவர்களாக, எனப்பல்வேறு மட்டங்களில் பல்கலைக்கழகததில் எழுந்த பிரச்சனைகளைத் தீர்க்கத தேவையான முயற்சிகளை முனைப்பாக எடுத்துவந்தனர். சீர்திருத்தத்திற்கான தேவையிருப்புதை உணர்ந்த பேராசிரியர்கள் முதல் உதவி விரிவுரையாளர்கள் வரை பலரும் UTHR இன் அங்கத்தவர்களாகவும், மாணவர் ஆலோசகர்களாகவும் பணியாற்றினர். இவர்களுள்

படிப்பகம்

www.padippakam.com



ராஜனியும் ஒருவர். இவர்கள் மாணவர்கள் வைத்து செய்யப்படுதலி, அவர்களின் பாதுகாப்பு விடயத்தில் எதிர் நோக்கிய பிரச்சனைகளை கவனிப்பதிலும், புதிய மாணவர்களின் வருகை சம்பந்தமான பிரச்சனைகளில் தீவிர முயற்சி எடுத்தனர். பொறுப்பிற்கு பதிலளிக்கும் வழி முறைகள் செயழிலந்து போயிருக்கும் நிலைக்கு உயர் அதிகார வேறு பாடுகள் வலுப்படுத்தப்பட்டு இருந்த நிறுவனத்துள் நிர்வாக அதிகாரத்தை செலுத்துதல் பல்கலைக்கழகத்துள் இருந்த ஓர் முக்கிய பிரச்சினையாக இருந்தது. இந்தக்கால கட்டத்தில் இணைப்புக்குழுவை அமைத்தது பல்கலைக்கழகத்தில் ஓர் முக்கிய நிகழ்வாகும். உபவேந்தரைத் தலைவராகவும், விரிவுரையாளர்கள் மாணவர்கள் நிர்வாக ஊழியர்களின் பிரதிநிதிகளையும் அங்கத்தவர்களாக இவ் இணைப்புக் குழு கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்தைப் பாதித்த பலநெருக்கடியான நிலைமை இக்குழுவால் எதிர் நோக்கக் கூடியதாக இருந்தது.

கல்வித்தரத்தை உயர்த்தவும், சமூகத்தில் நிலவும் பயங்கரவாதத்தை வேரறுக்கவும் சீர்திருத்தத்திற்கான இத்தூண்டுதல் மிக முக்கியமானது என பலர் கண்டனர். ஐந்து மருத்துவ கல்லூரிகளைக் கொண்ட எமது நாட்டில் சிறந்த உடற்கூற்றியலைக் கற்பிப்பதற்கு சிறப்புப் பயிற்சி பெற்ற நான்கு உடற்கூற்றியலாளர்களே இருந்தனர். (இப்போது மூவரே இருக்கின்றனர்). உடற்கூற்றியல் மருத்துவக் கல்லூரியில் ஒரு முக்கிய பாடமாக இருப்பதால் இத்துறைக்கு பல விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர். ராஜனி தனி ஒருவராக தனது பல தியாகங்களினால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உடற்கூற்றியல் துறையை சிறந்த முறையில் நடத்தி வந்தார். போர் நெருக்கடி நிலை காரணமாக தம் ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பாதிக்கப்பட்ட உதவி விரிவுரையாளர் ஒருவரின் பிரச்சனையை நிர்வாகி என்ற முறையில் ராஜனி திறைமையாக கையாண்டு தீர்ந்து வைத்திரா விட்டால் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தற்போது இங்கிலாந்தில் பயிற்சி பெற்றுக கொண்டிருக்கும் ஒரு உடற் கூற்றியலாளரை இழந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இப்போது யாழ்ப்பாணத்தில் வைத்தியர்களின் உருவாக்கமானது மாற்ற முடியாத அளவு பின்னடைந்து விட்டது.

எந்த வித ஊக்குவிப்பும் இல்லாத போதும் பயிற்றப்பட்ட விரிவுரையாளர்கள் பலர் அண்மைக் காலத்தில் நாடு திருமபியுள்ளனர். ஆய்வு வசதிகளுக்காகவோ, சம்பளத்திற்காகவோ அவர்கள் வரவில்லை. சமுதாயத்தில் தமக்கு விடுக்கப்பட்ட சவாலுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு இருப்பதாகவும் பிரச்சனைகளில் கொள்கை உறுதிப்பாடான நிலைப்பாட்டை எடுக்கக் கூடியவர்கள், சமுதாயத்திற்கு தேவை என்பதை உணர்ந்தமையாலும் அவர்கள் தம் நாட்டிற்கு திரும்பி வந்தார்கள். அவர்கள் தங்களை தாங்களே அசாதாரணமான

www.padippakam.com



வர்கள் என்று எண்ணவில்லை. சாதாரண மக்களைப் போல் அவர்கள் மத்தியில் அமைதியை நிலைநாட்டுபவர்களாக செயற்பட விரும்பினர். கலாநிதி பட்டங்களுடன் ராஜனி உட்பட நால்வர் நாடு திரும்பியமை இதற்குச் சான்றாகும். இவர்கள் நால்வரும் UTHR இன் அர்ப்பணமும், செயல் ஊக்கமும் உள்ள அங்கத்தவர்களாக இருக்கின்றனர். ஆகவே தமிழரின் கல்வி முன்னேற்றம் என்பது சமூகத்தோடு தொடர்புடையது என்றும் சமூகமானது இவ்வித அர்ப்பணத்தை மதிக்கின்றது என்றும் சமூகத்தில் அதற்கு இடம் இருக்கின்றது என்பதை புரிய வைப்பதிலுமே தங்கியுள்ளது.

ராஜனி நாடு திரும்பிய பின் வேறு மூன்று சக விரிவுரையாளர்களுடன் கூட்டாக 1988 இன் ஆரம்பத்தில் "முறிந்த பனைமரம்" ("The Broken Palmyrah") என்ற நூலை எழுதினர். இந் நூல் தமிழரின் துன்பங்களை பாரபட்சமின்றி ஆராய முயற்சித்தது. அரசாங்க அதிகாரங்கள், தீவிரவாத குழுக்களின் கருத்துக் கோப்புகள், செயற்பாடுகள் பற்றியும் வெளிப்படையாக இந் நூல் விமர்சித்தது. இதனால் தனக்கு ஏற்படக் கூடிய அபாயத்தை உணர்ந்திருந்தார். பல தடவைகள் தனக்கு மரணம் ஏற்படக்கூடும் என்பதையும் உணர்ந்திருக்கிறார். மூன்று மாத ஆய்வுப் பயிற்சிக்காக இங்கிலாந்தில் இருந்த வேளை தொடர்ந்து அங்கேயே தங்கி விடுமாறு பல நண்பர்கள் அவரை நிர்ப்பந்தித்ததை அவரிடம் இருந்த தனிப்பட்ட கடிதங்களும் அவரால் எழுதப்பட்ட கடிதங்களும் நிரூபிக்கின்றன. ஆனால் செப். 3ம் திகதி ராஜனி நாடு திரும்பினார். இவர் நாடு திரும்பிய போது இரு விடயங்கள் அவர் மனதில் இடம் பெற்றிருந்தன. ஒன்று இரண்டாம் வருட மருத்துவ மாணவர்களுக்கான உடற்கூற்றியல் பரீட்சைகள் மற்றயது அவரது உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு நிலையமான பூரணி நிலையத்தின் ஆரம்ப கால நெருக்கடி நிலை அவரை கொலை செய்தவர்கள் வாய்மொழிப் பரீட்சை நடந்து முடியும்வரை பொறுத்திருந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் இருந்து நாடு திரும்பியதும் உபவேந்தருக்கு ராஜனி எழுதிய கடிதம் அவரைப் பற்றிய பல விடயங்களை தெளிவுபடுத்துகின்றது. ஒக். 2-ம் திகதி நடந்த முதலாவது நினைவுக் கூட்டத்தில் உபவேந்தரால் அக்கடிதம் வாசிக்கப்பட்டது. அக்கடிதத்தில் தனது ஆராய்ச்சியின் வெற்றி குறித்து உபவேந்தருக்கு தெரியப்படுத்திய அவர் "எனது மக்களில் இருந்து பிரிந்து நான் வாழ முடியாது, எனவே நான் இங்கு வந்து விட்டேன்" என்று குறிப்பிட்டிருந்தார். இவ்வகையான அர்ப்பணமும், நேர்மைத் திறனும் தான் கொலைஞர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. உணர்ச்சியற்றதும், பிறர்மீது அக்கறையற்றதும் தனது அயலான் குறித்து அச்சம் கொண்டவர்களும் ஒரு தமிழ் சமூகத்தையே ராஜனியின் கொலையாளிகள் உரு

www.padippakam.com



வாக்க விரும்புகின்றார்கள். அச்சமூகம் கலாச்சார மற்றும் அறிவுசார்ந்த சூழ்நிலையற்ற மலட்டுத்தனமான பாலைவனமாகவே இருக்கும்.

## எதிர்ப்பு

இக்கட்டான சூழ்நிலை ஒவ்வொன்றிலும் ஆரம்ப அதிர்ச்சிகள் எவ்வளவு அதிகமாக இருப்பினும் மறைமுக ஊற்றுக்கள் பலவற்றில் இருந்து சக்தி பிறக்கின்றது. பெரும் பயத்தின் மத்தியிலும் தப்பியோடுவதை விட வேறு வழியில்லை என்ற உணர்ச்சி வலுப்பெற்று இருந்த போதிலும் எதிர்ப்பை எடுத்துக் கூறவும், வெறுப்பை வெளிக்காட்டவும், ராஜனியினுடைய பணியின் உண்மை நிலைப்பாட்டை காக்கவும் அவரை நினைவு கூறவும் எடுக்கப்பட்ட முயற்சிகள் அதிகரித்தன. மாணவர்கள் விரிவுரையாளர்களுடன் பொதுமக்கள் இதற்காக ஒன்றுசேர்ந்து ஊக்கம் அளித்தனர். ஆண்கள் பின்னடித்த போது பெண்கள் இது சம்பந்தமான செயல்பாடுகளை உவந்து முன்வந்தனர். அச்ச உணர்ச்சி குறைந்து வர அசாத்தியம் என் நினைத்திருந்தது சாத்தியமாயிற்று. கண்டனம் தெரிவிக்கும் சுவரொட்டிகளை மாணவர்கள் யாழ்ப்பாணம் எங்கும் ஒட்டினர். ஒக். 2 இல் பல்கலைக்கழகத்திலும் ஒக். 4 இல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் ஒக். 6 இல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் நடந்த மூன்று ஞாபகார்த்தக் கூட்டங்களிலும் பலர் கலந்து கொண்டனர். சுண்டுக்குளியில் நடைபெற்ற கூட்டத்தில் அக்கல்லூரியின் ஆசிரிய, மாணவர்களின் ஒத்துழைப்பும் உதவியும் பெருமளவில் கொடுக்கப்பட்டது. ஒக். 2-ம் திகதி காலையில் உபவேந்தர், கலைப்பீடாதிபதி ஆகியோரி தலைமையில் பல்கலைக்கழக சரித்திரத்திலேயே முன்னொரு போதும் இல்லாத விதத்தில் பெரிய ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. ஊர்வலம் தொடங்கும் வரை 250 பேராவது பங்கெடுப்பார்களோ என்ற சந்தேகம் பரவலாக இருந்தது. ஆனால் ஊர்வலத்தில் சென்றவர்களின் தொகையோ ஆயிரங்களில் கணிக்கப்பட்டது. இவையனைத்தும் அடுத்து என்ன நடக்குமோ என்ற பீதியின் அடிப்படையிலேயே நடந்தேறின. சமூகத்தின் வலிமையை கண்டு பிடித்தல் என்பது ஒன்று. ஆனால் அதனை சரியான முறையில் ஆக்க பூர்வமாக பயன்படுத்துவது வேறு. பல்கலைக்கழகமானது பல்வேறு பட்டங்களை வழங்கும் நிறுவனம் மட்டுமல்ல என்பதை அந்நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் மறந்தால் அது நிச்சயமாக அழிந்து போய் விடும். தற்கால உலகில் சிறந்த பிரஜைகளாக விளங்கக் கூடிய தலைவர்களை பயிற்றுங்களம் பல்கலைக்கழகம். பல்கலைக்கழகமானது மனித உரிமைகளை மதிக்கவும், நிலைநிறுத்தவும் கூடிய பெறுமானங்களுக்கு வித்திடுவது மட்டுமல்ல அது சமூகமானது தனது சூழலை கட்டுப்படுத்தி அதன் பெறுபேறுகளை சகலரும் அனுபவிக்கும் உரிமைகளையும் வளர்ப்பதிலும் பங்களிக்கிறது. பல்கலைக்கழகமோ, மனித உரிமைகளுக்கான 20பல்கலைக்கழக ஆசிரியர்அமைப்போ தொடர்ந்து செயற்படும் என்பதை

www.padippakam.com



நிச்சயமாக கூறமுடியாது. அடுத்து நடக்க இருப்பது என்ன என்பது உறுதியற்றது. எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கும் மாணவர்கள் பீதியுடனும் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையிலுமே உள்ளார்கள். எமக்கு எல்லோரது உதவியும் ஒத்துழைப்பும் வேண்டியிருக்கிறது.

## ஒரு வேண்டுகோள்

இன்று நிலைமையின் சிக்கலைத் தீர்மானிப்பதில் உள் சக்திகளின் பரிமாணமானது வெளியினதை விட மேலோங்கியுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது. ஆகவே நாம் அனைவருக்கும் குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் நாம் முகம் கொடுக்கும் புதிய நிலைமை பற்றி புரிந்துணர்வுடன் சமூகத்தினுள் இருந்தே அதற்கு பதிலளிக்க கூடிய வகையிலான போக்குகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் சக்திகளின் செயற்பாட்டை சேரழிக்க உதவாது இருப்பதே ஆகும். நாம் முகம் கொடுக்கும் பிரதான போராட்டம் யாதெனில் மனிதத்துவத்தையும், நாகரிக சமூக பெறுமானங்களையும் நிலை நிறுத்துவதாகும். இதன் வெற்றி, தோல்வியிலேயே ராஜனி அவர்களும் மற்றையோரும் தமது உயிரை வீணாக கொடுத்தார்களா இல்லையா என்பதை தீர்மானிக்கும்.

(அக்டோபர் 1989 நடுப்பகுதியில் UTHR (யாழ்ப்பாணம்) ஆல் வெளியிடப்பட்ட அறிக்கை)

www.padippakam.com

# முன்னுரை (அறிக்கை 1)

எமது நாடு முழுவதிலும் பரவலாக இருந்த நிலைமையின் பொருட்டு உணரப்பட்ட தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் 1988 – ம் ஆண்டு நடுப்பகுதியில் மனித உரிமைகளுக்காக பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பு உருவாகியது (இலங்கையின்) எல்லாப் பல்கலைக்கழகங்களிலுமிருந்தும் ஆசிரியர்கள் இதன் அங்கத்தவர்களாகவுள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனக் கூட்டங்களின் போது எழுந்த பிரச்சனைகளும் கருத்துக்களும் இவ்வமைப்பை உருவாக்குவதற்கான தேவையை உணர்த்தின. எனவே மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைபானது பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளத்தின் இணை அமைப்பாகவும், அதே சமயம் ஒரு சுதந்திர தனி அமைப்பாகவும் தொழிற்படும் என தீர்மானிக்கப் பட்டது. இதனால் பல்கலைக்ககழக ஆசிரியர் சம்மேளன முன்னணி உறுப்பினர்பலர் மனித உரிமைகளுக்காக பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பின் முதன்மை உறுப்பினராக விளங்கினர் எமது நாட்டின் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்க போதியளவு அக்கறை எடுக்கவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழ் பிரதேசங்களில் உருவாகிய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வாக அரசாங்கத்தால் இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டபோது தெற்குப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்கள் பாரா முகமாய் இருந்தமையும், வடக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போராளிக் குழுக்களிடையே வளர்ச்சியடைந்து வந்த உட்பூசல்களினால் ஏற்பட்ட அழித்தொழிப்புகளின் போதும் மௌனித்து இருந்தமையும் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. அரசியல் ரீதியாக தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகளுக்கு இலங்கை அரசாங்கம் இராணுவ அடக்கு முறைகளைப் பாவித்ததன் பிரதிபலிப்பே இன்று தெற்கில் அதிவேகமாக உயர்ந்து செல்லும் மனித உரிமை மீறல்களுக்கான காரணம்

www.padippakam.com

என தெற்கில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழக ஆசிரியர்கள் உணர்ந்துள்ளனர்.

1970 – களில் இருந்து தமிழ் பிரதேசங்களில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. சில காலமாக உள்ளடங்கி இருந்த இப் பிரச்சனை 1983 –ம் ஆண்டு இனக்கலவரத்துடன் வெளிக்கிளம்பியது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகளுக்காகப் போராடும் போது அமைப்புகளைப்பற்றி அறிந்திருந்தாலும் இக்கால் கட்டத்தில் அவ்வாறான ஓர் அமைப்பைத் தாமே தனித்து நின்று உருவாக்கி இருப்பார்கள் என்பது சந்தேகம் தான். நாட்டின் எல்லா பல்கலைக்கழக ஆசிரியர்களும் தமது தப்பபிராயங்களையும், தடைகளையும் பயங்களையும் தாண்டி ஒன்று சேர்ந்தமை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பின் ஓர் அங்கமே UTHR (யாழ்ப்பாணம்) ஆகும். இது தேசிய ரீதியிலான அமைப்பின் அங்கமாக இருப்பதனால் பெறப்படும் சக்தியும், ஊக்கமும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## UTHR (யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மத்தியில் இதுபற்றிய விளக்கம் அளிக்கப்பட்டபோது இவ்வமைப்பிற்கு வியத்தகு வரவேற்பு கிடைத்தது. தீர்வு காணமுடியாத பிரச்சனைகள் என தெற்கு அமைப்பினரால் கருதப் பட்டவை, எமது நீண்ட கால அனுபவம் காரணமாக கருத்தொரு மித்த வகையில் தீர்த்து வைக்கப்பட்டன. இப் பிரச்சனைகளில் சில வருமாறு: இவ் வமைப்பின் நடவடிக்கைகள் பல்கலைக் கழகத்துடன் சம்பந்தப்பட்டவர்களுடன் மட்டும் நிறுத்திவிடுவதா அல்லது முழு சமூகத்துடனும் தொடர்புள்ளதாக அமைவதா? அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை மட்டும் கவனத்திற் கெடுப்பதா அல்லது மனித உரிமை மீறல்கள் எவரால் செய்யப்படுகின்றன என்பதை கருத்தில் எடுக்காது செயல்படுவதா ? கடந்த காலங்களில் இப் பகுதியில் தொழிற் பட்டு வந்த மனித உரிமைகளுக்கான அமைப்புகள், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த மனித உரிமைகள் மீறல்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து வந்தன. வேறு எந்த குழுவிலும் பார்க்க மேலதிகமாக பொருள் வளங்களிலும், வேறு வளங்களிலும் அரசாங்கம் சர்வதேச ரீதியாக ஏற்றுகொள்ளப்பட்ட சட்டத்தை அமுல் படுத்தும் அதிகாரம் கொண்டு அமைப்பாக இருப்பதே இந் நிலைப்பாட்டிற்குரிய காரணமாக கொள்ளப்பட்டது அரசு பிரச்சனைகளை நீதியாகவும் விவேக மாகவும் தீர்த்து வைக்க முயற்சிக்காதமையே அம் மனித உரிமை மீறல் களுக்கான மூலகாரணமாகும். இவ்வமைப்புகள் செயலாற்றிவந்த உல

www.padippakam.com

கின் ஏனைய நாடுகள் எங்கிலும் மனித உரிமை மீறல்களில் அந்நாட்டு அரசாங்கங்களே ஏகோபித்த தனியுரிமை பெற்றிருந்தன. இந்நிலை கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், மற்றும் ஆயுதம் தாங்கிய புரட்சிக் குழுக்கள் இல்லாத நாடுகளிலும் உண்மையாக இருந்தது. இப்படியான நாடுகளில் மனித உரிமைகளுக்கான அமைப்புக்கள் ஆற்றிய சேவை எண்ணற்ற மக்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் அளித்தது என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனல் எமது சூழ்நிலையில், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய இலங்கை அரசின் அநியாயச் செயல்களை சர்வதேச ரீதியாக பகிரங்கப் படுத்தினல் போதுமானதாக பலர் நினைத்தனர், அதேவேளை குறிப்பிட்ட நிலைப்பாடுகளையும் குறிக்கோள்களையும் கொண்ட ஒரு இனம் என்று மனவலிமை மக்களிடையே வளர்க்கப்படவில்லை. இதனல் ஏற்பட்ட அடங்கிப்போகும் மனப் போக்கின் விளைவாக புறக்கணிக்க முடியாதளவிற்கு வளர்ந்துவிட்ட ஆயுதக் குழுக்கள் ஜனநாயகத்திற்கெதிராகச் செய்த மனித கொலைகளை கண்டிக்கும் ஆற்றலையும், விருப்பத்தையும் மக்கள் இழந்தனர். இலங்கை இராணுவத்தால் ஆயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டபோது எமது மக்கள் மேலும் அடங்கிப்போகும் மன நிலையை அடைந்தனர். இவர்கள் ஆயுதக் குழுக்களின் இராணுவப் பலத்திலும் அவைபற்றி சர்வதேச ரீதியாக நடைபெற்ற பிரசாரங்களிலும் மக்கள் ஆறுதல் கண்டனர். ஆயுதக் குழுக்களை கண்டிப்பது பிழை மட்டுமல்ல ஆபத்தானது என்ற நிலை மக்கள் உதவியற்றோர் ஆயினர் என்பதை ஏற்றுக்கொள்ள நியாயமானதாக இருந்தது. சிலர் அரசாங்கத்திற்கெதிரான மனித உரிமைகள் மீறல் பற்றிய பிரச்சாரங்களை ஆயுதப் போராட்டத்தின் ஒரு அம்சமாகவே கருதினர். மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டபோது பேச்சாளர்கள் எல்லோரும் தேசிய உரிமைகள் பற்றி — தனி தமிழ் ஈழம் பற்றி — பேசினர்களே அன்றி தனி மனிதனுக்கு எதிராக நடைபெறும் உரிமை மீறல்கள் பற்றி பேசவேயில்லை.

இலங்கை அரசிடம் இருந்து மக்களைக் காக்க தமது உயிரையே தியாகம் செய்ய முன்வந்தோரை கண்டிக்க கூடாது என்றகருத்து வாதமே ஆயுதம் தாங்கிய குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்ற தம்முள் முரண்பட்டு உட்கொலைகள் செய்தபோது மேலும் குழப்பத்தை கொண்டுவர காரணமாய் இருந்து. எமக்காக தமது உயிரையே கொடுக்க முன்வந்த பல இளைஞர்கள் எமது சமூகத்துள்ளேயே ஒளித்தோடினர். அவர்கள் வேட்டையாடப்பட்டு தாம் எதற்காக தேடப் படுகிறார்கள் ஏன் கொல்லப்படுகிறார்கள் என்று அறியாமலேயே கொலை செய்யப்பட்டு விட்டனர். இதை பற்றி எமக்கு சொல்வதற்கு ஒன்றுமில்லையா? அவ்வப்போது மற்ற குழுக்களின் அழிப்பில் ஆதிக்கத்திற்கு

படிப்பகம்

வரும் குழுவிற்கு தலைவணங்கி அவர்கள் எம்மை ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம்மிருந்து காப்பாற்றக்கூடிய சக்தி என்னும்மடிப்படையில் மௌனமாக இருந்தோம். நல்ல வேளையாக இவ்வாறு தன்மை எல்லோரும் கொண்டிருந்தார்கள் என்று கூற முடியாது. அதேவேளை தமது அரசியல் கருத்துகட்கு மேலாக மனிதாபிமானத்தை முன்வைத்த பல நிராயுதபாணிகளான பொது மக்கள் தப்பியோடி வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர். முன்னர் கூறிய நிலைமையானது ஒருவர் தான் கொண்டிருந்த பெறுமானங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு அந்தக் கட்டத்தில் அதிகாரம் பெறுபவருக்கு தன்னை அடிபணிய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதாக அமைகின்றது. எனவே துப்பாக்கி அதிகாரம் கைமாறிய பின் புதிய வெற்றி வீரரின் ''நாங்கள் தாக்கப்படும்போது நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?'' என்ற கேள்வி கேட்டவர்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதுடன், ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாயுமிருந்தது.

பிரச்சனையை ஒருவர் கூர்ந்து நோக்கும்போது மனிதனின் துன்ப வளையமானது தமிழன், சிங்களவன், இந்தியன், போராட்ட வீரன், இராணுவ வீரன் போன்ற எல்லா விதமான மக்களையும் உள்ளடக்கியுள்ளது என்ற உண்மையை புறக்கணிக்க முடியாது. பல விதமான அருவருக்கத்தக்க செயல்களைச் செய்யும், அரசயந்திரத்தில் உள்ளவர்கள் கூட, கேள்விகளை யெழுப்பும்போது, நாம் கரிசணையுடன் கேட்க வேண்டியவர்களாக உள்ளோம். பயணிகள் புகையிரதத்தை ஓட வைப்பதற்கு முயன்ற இராணுவ வீரர்களைக் கொலை செய்தமையையும், வங்கிகளுக்கிடையே பணப் பட்டுவாடாவை மேற்கொண்டிருந்த பொலிஸ் படையினரின் படுகொலையையும் நாம் அவ்வளவு இலகுவில் புறம்பே தள்ள முடியுமா? ''தமிழரைக் காக்கவே வந்துள்ளேன்'' என்ற எண்ணத்தில் இருக்கும் கூர்க்கா இராணுவ வீரனின் நிலையை அல்லது சீக்கிய வீரனின் நிலையை ஒருவர் பரிதாபத்துடன் நோக்காமல் இருக்க முடியாது. இவன் ஒருவருடனும் தகராறில் ஈடுபடவில்லை; ஆனால் பலர் இவனை விரும்பவில்லை. வேறுசிலர் அவனைக் கொல்ல வழி தேடுகின்றனர். இவர்கள் பல்வேறு பின்னணி அரசியலின் கைப்பொம்மைகளே.

தினமும் இளம் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இறந்தவன் சிலருக்கு நண்பனாகவும், வேறு சிலருக்கு பயங்கரமானவனாகவும் இருக்கலாம். ஆனால் அவன் விட்டுச் செல்லும் வெறுமை நிரப்பிவிட முடியாதது. இந்த இளம் உயிர், ஒரு பொதுமகனுடையதோ அன்றி போராளியினுடையதோ அன்றி இராணுவ வீரனுடையதாகவோ இருக்கலாம். நாம் சர்வதேச ரீதியாக பொறுப்புக்குட்பட்ட, சட்டத்தை நிலைநாட்டும் நிறுவனம் என்ற முறையில் அரசே மனித வாழ்க்கையை தாழ்ப்புபடுத்தி

எதேச்சாதிகார சூழலின் உருவாக்கத்திற்கு பிரதான மூலகாரணம் என்பதை ஏற்றுக்கொள்கின்றேம். இவர்களின் சில வெறுப்புணர்ச்சிகளைப் பரிதாபத்துடன் நோக்கும் நாம், இவற்றிற்கும் அப்பால் செல்ல வேண்டுமென இறைஞ்சுகின்றேம்.

அவர்களின் தொடர்ச்சியான நடவடிக்கைகள், அவர்களுக்கோ, அல்லது மற்றவர்களுக்கோ, வாழ்க்கையை இனிமையாக்குகின்றதா? எந்தவித வெறுப்புணர்ச்சி இருந்தாலும் மற்றையோரின் உரிமையை பறிக்க முனைவதை நியாயப்படுத்த முடியாது இந்திய இராணுவத்தினரின் இரண்டும்கெட்ட தற்போதைய நிலமைக்கு பின்னணி, இந்திய இலங்கை அரசுகளையும் போராளிக் குழுக்களையும் வழிகாட்டி நடத்தும் கோட்பாடில்லாத உறவின் வரலாறே காரணமாகும், மேலும் இங்கு முரண்படும் எதிர்பார்ப்புக்களும் அவைநிறைவேற்றுப் படாததினுல் ஏற்படும் ஏமாற்றமும் ஸ்திரமற்ற நிலைக்கு இட்டுசெல்கிறது. தமிழர் பிரச்சினைக்கான இலங்கை அரசின் ஆயுதரீதியான அணுகுமுறையின் தர்க்கவாதமானது, இறுதியில் எல்லா தமிழரையும் போராளிகள் என்று கருதவைத்துவிட்டதுடன் இவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து அழிப்பதே நலமென்றும கூறப்பட்டது. சர்வதேசக் காரணிகளாலேயே இலங்கை அரசாங்கத்தின் படுகொலைகள் ஓரளவுக்கு தடுக்கப்பட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்திய அமைதிகாக்கும் படை அரசியலை கீழ்தரமாக்கும் விதத்தில் தினசரி நடவடிக்கைகளில் கண்மூடித்தனமான இராணுவ அணுகுமுறையின் பயனுக உருவான பிரச்சனைகளை நாம் அறிக்கையாக்கியுள்ளோம். நடைமுறையில் மனிதாபிமானத்திற்கு எதிரான நடவடிக்கைகளை சில நடைமுறைசார்ந்த காரணம் எனக் கூறிக்கொண்டு நியாயப்படுத்தினுலும் கூட இந்நடைமுறைகள், அரசியல் அரங்கில் பெரிய இழப்பை அடைய வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்லும். இலங்கை இராணுவத்தை என்னென்ன வகைகளில் அம்பலப்படுத்தி புலம் பெயரச் செய்தார்களோ அதேவழிகள் மீண்டும் இவர்களால் பயன்படுத்தப் படுகின்றதோ என்ற வினு எழாமலில்லை,

எமது சமுதாயத்தை மேன்மைப்படுத்தக் கூடிய ஒரே வழி எமது சமுதாயம் எந்தப் பெறுமானங்களை தனது உயிராக பேணுகின்றதோ அவற்றிற்காக கடுமையாக போராடும் தன்மையை நாம் எமக்குள் வளர்க்க வேண்டியது அவசியம், என்பதை உணர்வதே என எமது கடந்த கால அனுபவங்கள் எமக்கு கற்பித்துள்ளன. மேற்கூறிய நிலைப்பாட்டை எடுக்காதது எமது இன்றைய நிலைமையில் சில பிரத்தியேகமான விடயங்களை எழுப்புகிறது. இதில் குறிப்பாக பல்வேறு வெகுஜன

www.padippakam.com

ஸ்தாபனங்களையும் களத்திலிருந்து புறம்பே தள்ளிய போக்கு பிரதான மானதாகும். இக்கட்டத்தில் துப்பாக்கிமூலம் பிரச்சனைகளை அணுகுவ தென்பது சில விதிவிலக்குகளாக அன்றி ஓர் பொது விதியாக மாற்றி யதும் அவற்றை கேள்வி கேட்கக் கூடிய அரசியற் போக்குகளின் மையிம் நிதர்சனமானதாகும்.

இதனுல் இவ்வாறுன போக்கைத் தட்டிக்கேட்க நினைக்கும் எந்த ஒருவனும் தனிமைப்படுத்தப்படுவதையும், வேறெந்த குறிப்பிடத்தக்க அரசியற் குழுவுடனும் சேர்ந்து கொள்ள முடியாத நிலையும் எழுந் துள்ளது, பல்கலைகழக ஆசிரியர்கள், அரசுக்கு புறம்பான சக்தி களினுல் மேற்கொள்ளப்படும் மீறல்களை கேள்வி கேட்க வேண்டிய நிலையில் விடப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஸ்தாபனமயப் படுத்தப்படுமளவுக்கு வளர்ந்துள்ள இவ்வாறுன அரசியற் போக்கை தட்டிக் கேட்கும் தகைமை எமது சூழ்நிலையைப் பொறுத்தவரையில், ஒரு மனித உரிமைகளை பேண முயலும் குழுவையே சாரும்.

இவ்வறிக்கையை சமர்ப்பிக்கும் போது, நாம் எண்ணிக்கையைத் தவிர்த்து, மனிதாபிமானத்திற்கு முக்கியமளிக்க முயன்றுள்ளோம். எம்மிடம் வந்து சேர்ந்த அத்து மீறல் பற்றிய அறிக்கைகளை நாம் பக் கச் சார்பின்றி சமர்ப்பித்துள்ளோம் இவ்வறிக்கைகள் பல்கலைக்கழகத்திற் குள் உள்ளவர்களாலும், பல்கலைகழகத்துடன் தொடர்பு கொண்டவர் களாலும் தொகுக்கப்பட்டுள்ளது, இயலுமானவரையில் உண்மையில் நடைபெறறதை வெளிக்கொணர முயன்றுள்ளோம்.

முக்கியமாக இல்வகை அத்துமீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் சமுதாயத்திற்கு நடக்கிறவற்றையும், தங்களுக்கு நடக்கிறவற்றையும் கவனித்து விளங்கிக்கொள்ள முயற்சிப்பதன் மூலம் தங்களையும், தங்கள் செயல்களையும் நன்மைக்கேதுவாக மாற்றியமைப்பார்கள் எனநம்புகிறோம். மேலும், உலகம் ஒன்றுடனென்று மிகவும் தொடர்புபட்டுக் காணப்படு வதால், எந்த ஒரு நிகழ்வும் தனிமைப்படுத்தப்பட முடியாது. இந்த சமுதாயத்தில் என்ன நடந்தாலும், அது வெளியுலகுடனுன தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே எமது சமுதாயத்தின் உண்மை நிலையை மறைப்பது, மறைக்க முயற்சிப்பது, எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும். ஆனுல் எமக்கு நடப்பவற்றை வெளிப்படுத்து வது உண்மையை நாமே உணர்ந்துகொள்ள வழி செய்வதுடன் அதன் மூலம் எம்மை மாற்றிக்கொள்ளவும் இது சவாலாக அமையும் என நம்புகிறோம்.

www.padippakam.com

*மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (யாழ்) அறிக்கை இரண்டிலிருந்து கலாநிதி ராஜனி திராணகமவின், பல்கலைக்கழகம் பற்றிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள். இப் பகுதிகள் இவ்வறிக்கைகளின் தன்மையை வெளிக்கொணருகின்றன.*

## பல்கலைக்கழகம்

1987-ம் ஆண்டு ஒக்டோபர் போரிற்குப் பிறகு, அமைப்பு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும், ஆத்ம ரீதியாகவும் ஒரு மனமுடைந்த நம்பிக்கையற்ற உணர்வே எல்லோர் மத்தியிலும் இருந்தது. இச் சூழ்நிலையின் மத்தியில், பல்கலைக்கழக சமூகம் எந்தவொரு துடிப்பையும் பற்றிக் கொள்ள ஆவலாயிருந்தது. ஆதலால், ஒரு பக்கத்தையும் சாராத மனப் போக்குகளையும், ஒன்று சேர்ந்த நடவடிக்கைகளையும் (collective action) எடுக்க வேண்டிய வாதங்கள் எழும்பியபோது அவற்றுக்குச் செவி கொடுக்க பலரும் தயாராகவிருந்தனர். ஸ்தாபன ரீதியான சுயவலுவையும் ஒன்று சேர்ந்த நடவடிக்கையையும் நிலைநாட்டும் முயற்சிகள் முதலாவதாக இந்திய இராணுவத்தின் மேலாதிக்கத்திற்கும் அத்துமீறல்களுக்கும் எதிராகவும், விடுதலைப் புலிகளின் பகிஷ்கரிப்புப் பிரசாரத்துக்கு எதிராகவும், எம்மை உள்ளூர பலவீனப்படுத்தும் பிரமுக அதிகாரத்துவ கலாச்சாரத்துக்கு எதிராகவும் ஆரம்பித்தன. அத்துடன் பல்கலைக் கழகம் தனக்காகமட்டும் வாதிடாது முழுச் சமுதாயத்துக்காகவும், பிரத்தியேகமாக, மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில், பேசவேண்டும் என்பதும் உணரப்பட்டது. ஆரம்பத்தில இச் கருத்துக்கள் பெரும்பாலும் வரவேற்கப்படவில்லையாயினும் பல்கலைக் கழகச் சமுதாயத்தினதும், ஒருவித சுதந்திரமும் அற்று நிற்கும் சாதாரண மக்களுடையதும் ஒன்றிணைந்த தன்மையே எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்ற யதார்த்தம் பெரும்பான்மையோருக்கு விளங்கியது. அதனல் அவர்கள் இவ்வாதங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டார்கள்,

மேலும், எமது நிலை, பல்கலைக்கழகம் திறக்கப்பட்டு விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேலுந் தெளிவாயிற்று. மாணவர்களும் ஊழியர்களும் எதிர்கொண்ட பிரச்சனைகள் பல்கலைக்கழகத்தில் அன்றுடைய வாழ்க்கையின் அம்சமாகியது. இதனால் இச் சமூகம் தனது அங்கத்தவர்களின் வரையறைக்குட்பட்ட ஒரு ஒன்றிணைந்த அமைப்பை உருவாக்கிக் கொண்டது. இச் செயற்பாடு பலத்த கருத்து மோதல்களுக்கும், வாதத்துக்கும் அடிகோலியது. பலர், பல்கலைக் கழகத்தின் பாரிய நோக்கு இச் சூழ்நிலையில் எவ்வாறாயினும் செயற்படுவதே என்றும் அதனால் சமுதாயத்தின் பிரச்சனைகளுடன் கூடுதலாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினர். மேலும் அது பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினர். ஆனால் இறுதியாக வெற்றிகண்ட நோக்கு என்னவெனில் பல்கலைக்கழகம் தனக்குத்தானே (Survival for its own sake) இயங்குவது என்பது அர்த்தமற்றதாகும். அது இயங்குவது சமுதாயத்தின் பயனுக்காகவே அல்லாது தனது பயனுக்காக அல்ல. அதனால் நாம் எம்மை சமுதாயத்திலிருந்து பிரித்துக்கொள்ள முடியாது. அத்துடன் எங்களுடைய குறுகிய சுவர்களுக்கு அப்பால் நாமும் சாதாரண குடிமக்களே.

இந்திய இராணுவ அதிகாரிகளுடன், பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் காவற்தடை சம்பந்தப்பட்ட நடைமுறைகளைக் குறித்து கலந்துரையாடல்கள நடைபெற்றன. உதாரணமாக, பல்கலைக்கழக மாணவனோ மாணவியோ அல்லாத ஊழியனோ கைது செய்யப்படும் பட்சத்தில் பல்கலைக்கழகத்துக்கு அதனைக் குறித்து அறிவித்தல், அதனைக் குறித்து கதைக்கவும் கேள்வி கேட்கவும் பல்கலைக் கழகத்துக்குள்ள உரிமை இவற்றுக்கு இராணுவ அதிகாரிகள் உடன்பட்டாலும் நடைமுறையில் இம்முறைகளை வேண்டாவெறுப்புடன்தான் தொடர்ந்தார்கள். அவர்கள் செய்த சிறிதளவுகூட எமது தொடர்ந்த பிரதிநிதித்துவத்தாலும், வற்புறுத்தலின் பேரில்தான். இம் முயற்சிகள் பல்கலைகழக ஸ்தாபனத்துக்கும், சமூகத்துக்கும் ஒருவித சுயமதிப்பை (dignity) கொடுத்தன.

அதே நேரத்தில், எமது சங்கங்களை ஸ்திரப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு, பிரச்சனைகளை ஒரு பரந்த அடிப்படையில் அணுகுவதற்கு எமது சக்திகளைத் திரட்டிச் சேர்த்தோம். இது இலகுவான காரியமல்ல. கடந்தகால அநுபவங்கள், ஒருவர்மீது ஒருவர் கொண்ட சந்தேகங்கள், எல்லோர் மத்தியிலும் ஆழக் குடிபுகுந்துள்ள விரக்தி, ஒருவருக்கெதிராக ஒருவர் கொண்ட தப்பெண்ணங்கள் (prejudice)

எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதற்கு எதிராக இருந்தன, என்றாலும் யதார்த்த நிலையின் போக்கு, ஒருவாறு இச் சூழ்நிலையில் வாழ்வதற்கு இவ்வாறான முயற்சிகளே சரியான வழியென்று நிறுவியது.

இதனைச் சார்ந்த இன்னொரு திசையிலும் நாம் செயற்பட்டோம். உரையாடல் பேச்சுக்கள் மூலமாக எம்மையே நாம் விமர்சிக்கத் தலைப் பட்டோம். எமது கடந்த காலத்தை ஆராய்ந்து எதிர்காலத்தை நோக்க முயற்சித்தோம். இது வெறுமனே பயத்தினால் உந்தப்படாமல் மக்களுக்கு உரித்தான அடிப்படை நீதிக்கான காரணங்களினால் வழிகாட்டப்பட்டது. இவ்வாறு எமது ஆயுதம் தாங்கிய இயக்கங்களைப் பொறுப்புடன் விமர்சித்தோம் அவர்கள் கையாளும் பயங்கரவாத முறைகளையும் கொலைகளையும் கண்டித்தோம். அத்துடன் மக்களின் அநியாயமான வாழ்க்கைப் பலிகளுக்கு இட்டுச் செல்லும் இயக்கங்களின் நடவடிக்கைகளையும் கண்டித்தோம்.

## இந்திய இராணுவமும் பல்கலைக்கழகமும் — கத்தி முனையில் நடப்பது போல்

இத்தகைய சூழலின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக வாழ்க்கையை நோக்க வேண்டும். வழமைக்குத் திரும்பும் முயற்சிகளிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் முயற்சிகளிலும், இந்திய இராணுவம் பல்கலைக்கழகத்துடன் ஒரு சுமுகமான உறவைக் கொள்ள முனைந்தது என யாரும் எண்ணினால் நாம் அவரைப் பிழை சொல்ல முடியாது. ஏனெனில் சமுதாயத்தின் நலனையும், நட்பையும் தாம் வேண்டுகிறார்கள் எனக் கூறிக்கொண்டார்கள். ஆனால் இதற்கு எதிர்மாறாக எமது மாணவர்களும் ஊழியர்களும் கைது செய்யப்படும்போது அவர்களை அடித்துச் சித்திரவதையும் செய்திருக்கிறார்கள். சில சமயங்களில் 2,500 ரூபாய் பணம் வைத்திருந்தார் என்ற காரணத்துக்காகவும் பல நாட்கள் தொடர்ந்த காவற்தடை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தோற்றங்களுக்கு ஆயிரக்கணக்கான காரணங்கள் இருக்கலாம். ஆனால் இந்திய இராணுவம் ஒன்றே ஒன்றை நம்பிச் செயற்பட்டது — பல்கலைக் கழகத்தின் எல்லா மாணவர்களும், புலிகளுடன் சேர்ந்தவர்கள் அல்லது புலிகளில் சேரக்கூடியவர்கள் அல்லது தகவல்களைத் தரக்கூடியவர்கள் என்பதே அவர்களது எண்ணம். அதனால் அவர்களின் எண்ணத்தின்படி சித்திரவதை எப்போதும் பயனளிக்கும் என்பதே. அத்துடன், காவலில் வைக்கப்பட்டவரின் நலன்களைப் பாதுகாக்கச் சென்ற பல்கலைகழகக் குழுக்களின் அனுபவங்களும் இந்திய இராணுவத்தின் மனப்பாங்கை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தும். முன்னர் குறிப்பிட்டதுபோல பல்கலைக்கழகச் சமூகம் ஒரு ஒன்றிணைந்த அமைப்பு (collective body) என்ற ரீதியில் சமுதாய அடிப்படையில் சில விடயங்களைத் தெளிவு

படுத்திக் கிரகிப்பதில் ஒரு தீர்க்கமான முயற்சி எடுத்தது உண்மையான சுதந்திரத்தை நோக்கி அமைப்புக்களைக் கட்டியெழுப்பல், நீண்டகாலப் பார்வையின் நோக்கு, தம்மில் தாமே தங்கியிருத்தல் ஆகிய விடங்களும், இவற்றுக்கு மாருக உள்ள குறுகியகால இலக்குகள், பிரசாரச் சதிகள், அடிபணிந்து செல்லுதல் ஆகியனவும் வெளிப்படையாக எடுத்துரைக்கப்பட்டன. இத்தகைய நிலைப்பாடுகளில் இருந்து மக்களுடைய நலனுக்காகவும் அவர்களது ஸ்தாபனங்களுக்காகவும் நாம் கூடிய ஈடுபாட்டுடன் வேலை செய்ய வேண்டும் என்ற மன்ருட்டமும் எழுந்தன. அத்துடன் எம்மிடையே உள்ள உட்சக்திகள் தமது செய்கைகளைப்பற்றி சமுதாயத்துக்கு விளக்கம் கொடுத்து பொறுப்பை ஏற்க வேண்டும், என்ற வேண்டுகோளும் எளுந்தது. ஆனல் இன்று மட்டும் இந்திய இராணுவத்திடமோ அல்லது எமது ஆயுதந் தாங்கிய இயக்கங்களிடமோ இவ்வீதியில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆகையால், தற்போது, ஒரு மலையின் விளிம்பில் நிற்கின்ருேம் என்று எமக்குத் தெரிகிறது. ஒரு பல்கலைக் கழகத்தின் அதிகாரம் பலாத்காரத்திலிருந்து எழமுடியாது. அதிகளவிலான சமூக — பொருளாதார உடமைகளுக்கான சேதத்தைக் கண்டுள்ள இச் சூழலிலே, இத் திசையை, அழிவுக்கு இட்டுச் செல்லும் இப் போக்கை மாற்றியமைக்க மாற்றுக் ■ நத்துக்களை நேர்மையுடனும் மனத்திடத்துடனும் முன்வைப்பது பல்கலைக் கழகத்தின் கடமையாகிறது. இதனை விட்டு, ஒரு சாரார் பல்கலைக் கழகம் தமக்கு ஆபத்தை விளைவிக்கும் (Security risk) ஒரு இடம் மட்டும் எனக் கருதியும் மற்றச் சாரார், பல்கலைக் கழகத்தின் சுய சிந்தனை தமக்கு ஒரு இழுக்கை (an embarassment) ஏற்படுததும் ஸ்தாபனம் என்று மடடும் கருதியும் வந்தார்கள் எனில் இது எல்லோருக்கும் ஆபத்தை ஏற்படுத்தி ஒரு நன்மையும் பயக்க முடியாத நிலையைக் கொண்டுவரும்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்